செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 349 நாள் : 15/6/17

# பத்திரிக்கைச் செய்தி

வேலூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி)ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேர்க்கைக்கான குழந்தைகளைத் தெரிவு செய்யும்பணி 31.05.2017 அன்று அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளில் ஒரு சிலர் சேர்க்கைக்கு வராதகாரணத்தினால் நிலுவையாக உள்ள காலிபணியிடங்களுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாத குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கு சம்மந்தப்பட்ட பள்ளிகளில் 20.06.2017 அன்று காலை 10.00 மணிக்கு துறை சார்ந்த பிரதிநிதி முன்னிலையில் சேர்க்கை வழங்கப்படவுள்ளது.

எனவே, ஏற்கனவே இணையவழியாக விண்ணப்பித்துச் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்படாத குழந்தைகளின் பெற்றோர்கள் 20.06.2017 அன்று காலை 10.00 மணிக்கு விண்ணப்பித்துள்ள பள்ளிக்குச் சென்று காலியாக உள்ள இடத்தில் சேர்க்கை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.